தேவநேயப் பாவாணரின் நூல்களை வெளியிடும் திட்டம்.

*வினா எண். 447—திரு. பெ. திருமாறன், திரு. எம்.சின்னசாமி, திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் எழுதி வைத்திருக்கும் மொழி நூல்களை அரசு வெளியிட திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பாவாணர் அவர்கள் எழுதியுள்ள வெளியிடப்பட்ட வெளி வராத நூல்களின் விவரங்கள் அவைகளின் பதிப்புரிமையாளர்கள் ராயல்டி முதலிய தகவல்கள் தமிழ் வளர்ச்சி இயக்குநரால் சேகரிக்கப்படுகின்றன. அவரது அறிக்கை கிடைத்தவுடன் நூல்களை அரசே வெளியிடுவது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. பெ. திருமாறன் : தலைவர் அவர்களே, அது எவ்வளவு நாளில் வெளியிடப்படும்? அதற்காக ஒரு தனிக்குழு அமைக்க அரசு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே' விவரங்களைப் பல்வேறு தனிப்பட்டவர்களிடமிருந்து பெற்று நாம் செயல்படுத்தி வருகிறோம். அது வந்தவுடன், அந்த விவரங்களைச் சேகரித்து பரிசீலிக்கப்படும். இதற்காகத் தனிக் குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தனித் தமிழில் எழுத வேண்டும், பேச வேண்டும் என்ற கருத்தில் தனித் தமிழை வைத்துக் கொண்டே தமிழ்ப் பேரறிஞர் தேவனேயப் பாவணர் பெயரில் நூல் நிலையம் ஒன்று அமைக்கப்படும் என்று அவருடைய இரங்கல் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த முயற்சி மேற் கொள்ளப் பட்டு, அவர் பெயரால் நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை மாவட்ட நூலகக் குழுவால் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட நூலகத்திற்கு தேவனேயப் பாவணர் பெயரிடப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, எழுஞாயிறு தேவனேயப் பாவணர் அவர்கள் வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள கோமதிபுரத்தைச் சேர்ந்தவர். அங்கே அவருக்கு ஒரு நினைவாலயம் ஏற்படுத்த அரசு முன்வருமா? அவரது வொர்க்ஸ் பூராவையும் ரிசர்ச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1982 மார்ச் 12]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆகவே, தனியாகக் கேள்விகள் கேட்க வேண்டும். இருந்தாலும் அவர் எழுதிய நூல்களைப் பாதுகாக்க வேண்டும் என்கிற அடிப்படையில், இது வரையில் வெளி வராத நூல்கள் வெளியிடப்பட வேண்டும் என்ற கருத்தை அரசு ஏற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த வகையில் அவரது நூல்கள் பாதுகாக்கப்பட்டு ஆராய்ச்சிக்கும் பயன்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நீதித் துறையில் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்குச் செய்யப் பட்ட ஒதுக்கீடுகள்.

*வினா எண். 448—**திரு. க. பாரமலை** : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீதித்துறையில் Ministerial Service State Judicial Service Higher Judicial Service ஆகியவற்றிற்கான நேரடி தேர்வுகளில் தாழ்த்தப்பட்ட மற்றும்மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடுகள் செய்ய தமிழ்நாடு உயர்நீதிமன்றம் ஒப்புக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அதன் அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு இதுவரை எத்தனை நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஏற்கனவே பணி விதிகளில் இதற்கான வழிவகைகள் உள்ளன.

	தாழ்த்தப் பட்ட வகுப்பு.	மலைவாழ் மக்கள்.
(ஆ) 1. தமிழ்நாடு உயர்நீதித் துறைப்பணி (Tamil Nadu State Higher Judicial Service)	1	..
2. தமிழ்நாடு நீதித் துறைப்பணி. (Tamil Nadu State Judicial Service)	28	..
3. தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணி (Tamil Nadu State Judicial Ministerial Service)	498	77